

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் சார்பில் மூன்றாம் கட்டமாக புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, சி.பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதலாவது உறுப்பினரும், சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையைச் சீரமைத்தவரும். ஆதிதிராவிட மக்களின் துயரங்களை முதன்முதலாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவருமான எம்.சி. இராஜா அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த எம். புருஷோத்தமன், திருமதி பி. குமுதா, மோகன்ராஜ், திருமதி ருக்மணி மோகன்ராஜ், ஜெனிக்யஸ், அகஸ்டின், திருமதி கிரேசி, திருமதி மேரி கிளாரா உள்ளிட்ட குடும்பத்தினர் சந்தித்து, சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை நேற்று திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், க.லட்சுமி பிரியா, த. ஆனந்த், கே.எஸ். கந்தசாமி, எஸ். அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

### 2025-ஆம் ஆண்டிற்கான

# ‘சிறந்த திருநங்கை’ - ரேவதி மற்றும் திருநங்கை பொன்னி ஆகியோருக்கு விருது!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஏப்.17-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் 2025ஆம் ஆண்டிற்கான ”சிறந்த திருநங்கை விருதினை” நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை ரேவதி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பொன்னி ஆகியோருக்கு திருநங்கைகளின் நலனுக்காக அவர்கள் ஆற்றிய சிறந்த சேவையைப் பாராட்டி வழங்கினார்.

திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத் திட்டங்கள் பெண்களைப் போல மூன்றாம் பாலினத்தவரையும் சமுதாயம் மதிக்கும் வகையில், அவர்களை கண்ணியத்துடன் அழைக்க வேண்டும் என்னும் எண்ணத்தின் வெளிப்பாடாக “திருநங்கை” என்ற மரியாதைக்குரிய சொல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

திருநங்கைகளுக்கு முழுமையான சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அங்கீகாரத்தை வழங்கி அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் நல வாரியம் 15.04.2008ல் சமூக நலத்துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. தற்போது இந் நல வாரியமானது 2.04.2025 அன்று திருத்தியமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா, மருத்துவக் காப்பீட்டு அட்டை, தையல் இயந்திரம், சொந்த தொழில் தொடங்கிட மானியம், சுய உதவிக்குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்தல், தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 40 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1500/ வீதம் ஓய்வூதியத் தொகை, திருநங்கைகள் உயர் கல்வி பயின்றிட கல்விக் கட்டணம், விடுதி கட்டணம் மற்றும் அனைத்து கட்டணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் மற்றொரு முயற்சியாக, திருநங்கைகள் சமூகத்தின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும், உயர்கல்வி கற்கும் திருநங்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் 1000 ரூபாய் ஊக்கத் தொகை இனி திருநங்கையர்களுக்கும் கிடைக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், அவர்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்யும் நோக்கில், முதற்கட்டமாக சென்னை, ஆவடி, தாம்பரம் மாநகர ஊர்க்காவல் படையில் திருநங்கையினரை பணியமர்த்த தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இந்த முன்முயற்சிகள் திருநங்கைகளின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதிலும், அவர்களுக்கு சமூகத்தில் சமமான அங்கீகாரம் கிடைப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன.

**சிறந்த திருநங்கை விருது - 2025**

தமிழ்நாடு அரசு திருநங்கைகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் குறிப்பிடத்தக்க முன்முயற்சியாகவும், அவர்களை சமூகத்தின் முக்கிய பங்களிப்பாளர்களாக அங்கீகரித்து சிறப்பிக்கும் விதமாகவும் 2021ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் “சிறந்த திருநங்கை விருது” வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதானது திருநங்கைகளின் நலனுக்காக அயராது பாடுபட்டு, சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழும் திருநங்கை ஒருவருக்கு வழங்கப்படுகிறது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவால் தேர்வு செய்யப்படும் இந்த விருதாளருக்கு, திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15-ஆம் நாளில் விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

இந்த விருதினைப் பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காசோலையும், அவர்களது சேவை மற்றும் சாதனைகளைப் பாராட்டும் விதமாக சான்றிதழும் வழங்கப்படுகிறது. இந்த விருதானது திருநங்கை சமூகத்தின் உன்னதமான சாதனைகளை அங்கீகரிப்பதோடு, அவர்களது சமூக முன்னேற்றப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

அந்த வகையில் தனது சொந்த உழைப்பாலும், தனித் திறமையாலும் முன்னேறி, பல திருநங்கை மக்களின் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து வரும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை அ. ரேவதி என்பவரின் சிறந்த சமூக சேவையைப் பாராட்டியும், திருநங்கைகள் தங்களது அயராத முயற்சியால் கல்வியிலும், கலையிலும் சிறந்து விளக்க முடியும் என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை க.பொன்னி என்பவரின் சிறந்த சமூக பங்களிப்பைப் பாராட்டியும், தமிழ்நாடு அரசின் 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது மற்றும் தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. ஆர்.லில்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் ஏ. முஹம்மது சித்தீக், துணைத் தலைவர் ஐ. முஹம்மது முனீர், பொதுச் செயலாளர் ஏ. முஹம்மது ஷிப்லி, துணை பொதுச் செயலாளர் தக்வா எம். மொய்தீன், பொருளாளர் ஏ.ஐ. பிர்தவ்ஸ் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

### முதலமைச்சர் அறிவித்த

# ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2ஆம் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

**சென்னை, ஏப். 17-**

**முதலமைச்சர் அறிவித்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2 ஆம் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.**



இது குறித்து சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஜி.கே. மணி:** தவித்த வாய்க்கு தண்ணீர் வேண்டும். தாகம் தீர்க்க தண்ணீர் வேண்டுமென்கிற அடிப்படையில் மிக வறண்ட மாவட்டங்களாக இருக்கிற தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2 ஆம் திட்டம் வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை பல முறை வைத்தோம். அமைச்சர் அவர்கள் நீங்களும் நேரடியாக பார்வையிட்டீர்கள். (குறுக்கீடு)

முதலமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டு, திட்டம் எல்லாம் தயாராக இருக்கிறது. எல்லாம் தயாராக இருக்கிறது. நிதியும் 7891 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறது. அடிக்கடி நீங்களும் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். நாங்களும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆகவே, இந்தாண்டு மிக விரைவாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா, ஏனென்றால், எல்லா ஊர்களுக்கும் தண்ணீர் போகவில்லை. சில ஊர்களில் ஒரு மணி நேரம், அரை மணி நேரம். . .

**அமைச்சர் கே.என்.நேரு:** அது ஜல் ஜீவன் திட்டத்திலே ஒன்றிய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய நிதியும், மாநில அரசினுடைய பங்காக இருக்கிற நிதியும் இரண்டுமே அதற்காக கொடுக்கப்பட்டுவிட்டது. 8 ஆயிரம் கோடி ரூபாய் கிட்டத்தட்ட, 10 கோடி ரூபாய் குறைவாக, 8 ஆயிரம் கோடி ரூபாய். அந்த 8 ஆயிரம் கோடி ரூபாயில் JICA விலே நாம் கடன் கேட்டிருக்கிறோம். அவர்கள் சில condition போட்டிருக்கிறார்கள். இன்னும் 2 மாதங்கள் ஆக வேண்டும், 3 மாதங்கள் ஆக வேண்டுமென்று அப்போதுதான்—ஜூன் மாதம் 25 ஆம் தேதிக்குள் அதை முடித்துத் தருவதாக, ஒப்புதல் தருவதாக JICA நிறுவனத்திலே சொல்லியிருக்கிறார்கள். எனவே, கடன் தருகிறவர்கள் அவர்களுடைய priority என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். இவ்வளவு நாட்கள் இவ்வளவு நாட்கள், இவ்வளவு மக்கள் தொகை என்றெல்லாம் கணக்கு பார்க்கிறார்கள். அந்தப் பணிக்கு ஜூன் மாதம் 25 ஆம் தேதிக்குள் கையெழுத்து போட்டு தந்துவிடுவோம் என்று உறுதி கொடுத்துவிட்டார்கள்.

ஜூன் அல்லது ஜூலைக்குள் அது tenderக்கு வந்துவிடும். நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம் உறுதியாக அது நிறைவேற்றப்படும். அதுவும் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம் முழுவதும் அந்த குடிதண்ணீர் செல்லும்போது மிகச் சிறப்பாக அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### இராயபுரம் — மன்னார்சாமி கோவில் தெருவிலிருந்து

# டோல்கேட் வரை மேம்பாலம் - அரசு முன்னுரிமை அளிக்கும்!

## சட்டப்பேரவையில் — அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

**சென்னை, ஏப்.17-**

**இராயபுரம் தொகுதி மன்னார்சாமி கோவில் தெருவிலிருந்து ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள டோல்கேட் வரை மேம்பாலம் அமைக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையினை அரசு முன்னுரிமை அளித்து செயல்படுத்தும் என, சட்டப்பேரவையில், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, கேள்வி நேரத்தின் போது பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.**



கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஐட்ரீம் இரா. மூர்த்தி:** இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், மன்னார்சாமி கோயில் தெருவிலிருந்து ஆர்.கே. நகர் வரை இருக்கின்ற சூரியநாராயணன் செட்டி தெரு வரை உள்ள 3 கி.மீ. தூரம் திருவொற்றியூர், எண்ணூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி வழியாக சென்னைக்குள் நுழையக்கூடிய அனைத்து வாகனங்களும், சூரியநாராயணன் செட்டி தெரு, மன்னார்சாமி கோயில் தெரு வழியாகத்தான் Parry's Cornerஐ வந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இங்கு மேம்பாலம் ஒன்றை ராயபுரம் சூரியநாராயணன் செட்டி தெருவிலிருந்து மன்னார்சாமி கோவில் தெரு, tollgate, ஆர்.கே. நகர் வரை கிட்டத்தட்ட 3 கி.மீ. பரப்பளவு வருகிறது.

நான் 2021ல் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வியின் மூலமாகக் கேட்டபோது, போக்குவரத்துச் செறிவு இல்லை என்கிற காரணத்திற்காக, அந்தக் கோரிக்கையை பிற்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருந்தார்.

இன்றையதினம் மிக அதிகமான போக்குவரத்து இருக்கக்கூடிய ஓர் இடமாக அந்தப் பகுதி விளங்கி வருகிறது. ஏனென்றால், ஐந்து தொகுதியில் இருக்கக்கூடிய, திருவொற்றியூரில் இருக்கின்ற அனைத்து companyகளிலிருந்தும் வரக்கூடிய அனைவரும் அந்த வழியில்தான் வருகிறார்கள்.

எனவே, அதை அமைச்சர் நிறைவேற்றித் தருவாரா?

**அமைச்சர் எ.வ.வேலு:** அவர் சொல்கிற சாலை என்பது, போக்குவரத்து அதிகமாக உள்ள சாலைதான். பொதுவாக சாலை அமைக்கின்றோம் என்றால், ஐந்தாண்டு காலம் நிறைவடைந்த பின்புதான் renewal செய்வதாக இருந்தாலும், விரிவுபடுத்துவதாக இருந்தாலும் செய்ய முடியும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்வியை கோரிக்கையாக எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, இந்த ஆண்டு அதற்கு முன்னுரிமை அளிக்க முடியுமா என்பதைத் துறையின் சார்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### பெரம்பலூர் மாவட்டப் பொறியாளர் அணிக்கான

# ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கு நேர்காணல்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஏப். 17-

பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணிக்கான ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கு நேர்காணல் இன்று (17.04.20205 -வியாழக்கிழை) நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,,



கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., ஆணைக்கிணங்க, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி, ஆலோசனையின் பேரில்,

மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே.பி.கருணா வழிகாட்டுதல்படியும், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான இரா.ப.பரமேஷ்குமார் தலைமையிலும்,

பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும், ஒன்றிய,நகர, பேரூர் கழக பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு இன்று (17.04.2025 - வியாழக்கிழமை), காலை 10.00. மணியளவில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நேர்காணல் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாநில பொறியாளர் அணி செயலி மூலம் பதிவு செய்தவர்கள் மேற்கண்ட நேர்காணலில் பங்கேற்கும் படியும், கழக நிர்வாகிகளும் பங்கேற்கும் படியும் பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சட்ட மாமேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் முன்பு மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி அறிவுறுத்தலின்பேரில், மாவட்ட அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில், அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து கழகத்தினர் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர். எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநில நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், வழக்கறிஞர் என். மணிராஜ், முனவர்ஜான், பி.விஜயகுமார், மாவட்ட கழக நிர்வாகிகள் பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பாலக்கரையில் அமைக்கப்பட்டிருந்த கோடைகால நீர்,மோர்,தண்ணீர் பந்தலை, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., திறந்து வைத்து, தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தி.இராசா, பொறியாளர் அணி மாவட்ட தலைவர் பி.எஸ்.வேல்முருகன், மாவட்ட துணைத்தலைவர் பி.செல்லச்சாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.பெரியசாமி, ஜி.கே.மூர்த்தி, ஆர்.ரவிச்சந்திரன், ஆர்.ராஜாராம், ஜி.ராஜசேகர், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.